# பயன்படுத்தப்படாத பழைய வாகனங்கள்

# இழுத்துச்செல்ல நடவடிக்கை



## மாநகர் மன்றம் நினைவுறுத்தல்

கோலாலம்பூர், ஜூலை 24-

பயன்படுத்தப்படாத பழைய கார்களை பொது இடத்தில் நிறுத்தி வைக்கும் அவற்றின் உரிமையாளர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தலைநகர் கோலாலம்பூரில் தலைதூக்கியிருக்கும் இந்தப் பிரச்சினை மாநகர் வாசிகளுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளியிட்ட அறிக்கை கூறியிருக்கிறது.

பயன்படுத்தப்படாத பழைய கார்கள் இப்படிப் பொது இடங்களில் கைவிடப்பட்டுக் கிடப்பதால் இன்னொரு பிரச்சினையும் ஏற்படுகிறது. பயன்படுத்தப்படாத பழைய கார்கள் பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்படுவதால் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. போக்குவரத்துக்கும் அது இடையூறை ஏற்படுத்துகிறது.

கொசு உள்ளிட்ட விஷப்பூச்சிகள் உற்பத்தியாகும் இடமாகவும் அது மாறிவிடுகிறது. கைவிடப்பட்டுக் கிடக்கும் பழைய கார்களை சாலாக் செலாத்தான், தாமான் கோன்னோட், பந்தாய் சென்ட்ரல் ஆகிய பகுதிகளில் உள்ள பழைய வாகனக் கிடங்குகளுக்கு இழுத்துச் செல்லும் பணியை கோலாலம்பூர் மாநகர் மன்றம் தீவிரப்படுத்தியிருக்கிறது.

கைவிடப்பட்டுக் கிடக்கும் பழைய வாகனங்கள் மீது வைக்கப்படும் நோட்டீஸ்களுக்கான கால அவகாசம் நிறைவுபெற்ற பின்னர் அவற்றை இழுத்துச் செல்லப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

ஆகவே பயன்படுத்தப்படாத பழைய வாகனங்களின் உரிமையாளர்கள் அவற்றின் பழுதை நீக்க நடவடிக்கை எடுக்கலாம். அல்லது அந்த வாகனங்களின் பாகங்களை தனித்தனியாகக் கழற்றி வாகன உபரிப் பாகங்களாக அவற்றை விற்று விடலாம் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

வாகனம் இழுக்கப்பட்டபிறகு தான் உரிமையாளர்கள் பல காரணங்களைக் கூறுகின்றனர். நோட்டீஸ் அனுப்பப்பட்டது தங்களுக்குத் தெரியாது என்று சிலர் கூறுகின்றனர்.

இழுக்கப்பட்ட வாகனம் தங்களுக்கு வேண்டும் என்றும் வாதாடுகின்றனர். ஆனால் பல வாகனங்கள் மாதக்கணக்கில் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன. சில பழைய வாகனங்கள் ஆண்டுக்கணக்கில் கைவிடப்பட்டும் கிடக்கின்றன என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.